ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

13.11.2025

1. வேலவா உமை போற்றி வாழவே
வேள்வியாக மாதரும வழிகள்
காலமதில் பிரணவக் குடில் படைத்து
கருணைமிக்க அரங்கனென் அவதாரம்

2. அவதாரம் நிகழ்த்தி உலகோர்
அனைவரும் எனை பின்பற்றிவர
அவணியில் அற்புதம் நிகழ்த்திய நல்
ஆறுமுகா உன் பெருமை கூறியே

3. கூறியே விசுவாவசு துலை திங்கள்
குறைவிலா சதுர் குருவார அருளாசி
அறிவுரையாக அருட்சுவடி வழியில்
அன்பர்கட்கு அரங்கனும் உரைப்பேன்

4. உரைக்கவே இளமையில் ஞானவழி
உடன் வந்துவிட நலமப்பா
குறைவிலா வளர்ச்சி மற்றும்
கூறிடுவேன் மகிழ்ச்சி காலமே

5. காலமே தானதருமம் செய்துவிட
கட்டாயம் தளர்ச்சி என்று வாரா
காலனே அஞ்ச எங்கள் காப்பு
கலியினில் பரிபூரணமாக உண்டு என்பேன்

6. என்கவே உழைப்பும் செல்வமும்
இளமையும் பெருமையும் இருக்கவே
நன்மைதரும் ஞானிகளை வணங்கி
ஞானபூசை நடக்கும் அன்னதான சேவை வழி

7. சேவை வழி பெருமளவு தருமம் செய்து
சேர்க்க வேண்டும் தருமபலமதை
அவணியில் ஞானிகளிடம் நற்பேரு
அன்னதானபலம் கொண்ட மக்கட்கு

8. மக்கட்கு தளர்ச்சி அணுகா காப்போம்
மறுமையும் வாரா மீட்போம்
பக்குவமும் ஞானபலமும் கூட்டி
பாதுகாத்த செல்வமோடு ஞானமும்

9. ஞானமும் குறையா வண்ணம்
ஞாலத்தில் தளர்ச்சி கண்டாலும்
தானவர்க்கு துன்பம் நேரா காப்போம்
தரணியில் எங்கிருந்து பின்பற்றினாலும்

10. ஆனபோதும் அங்கெல்லாம் வந்திரங்கி
அருள் செய்வோம் நாங்களப்பா
ஞானபீடமாம் பிரணவக் குடிலில்
நடக்கும் ஞானிகள் பூசை அன்னதான சேவையில்

11. சேவையில் பங்களிப்பு செய்துமே
சீடர்களாய் அடையாளம் கண்டுவிட
அவணியில் ஞானிகளாக ஆற்றல்பெறுவீரப்பா
அரங்கன் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி